மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: நேற்றைய தினம் ஞாயிற்றுக் கிழமை என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அந்தத் தொழிலாளர்கள் வெளியூர் சென்றிருக்கிற காரணத்தால் அவர்களை உடனே வேலைக்கு வரவழைத்து, வேலையில் ஈடுபடுத்த அந்த நிர்வாகம் எண்ணி, எல்லாப் பத்திரிகைகளுக்கும் விளம்பரம் கொடுத்திருக்கிறார்கள். அது 'பாக்ஸ்' நியூசாக வந்திருக்கிறது. அந்த அடிப்படையிலே செய்து, பத்திரிகையில் வந்திருக்கிறது. இது நம்மால் தடுக்க முடியாத ஒன்று ஆகும்.

திரு. க. சுப்பு: வந்த பிறகு இவர் என்ன சொல்வது என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பத்திரிகையில் வருவது ஒன்றிரண்டு குறைந்து இருக்கும். முழுமையான அறிக்கைக் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே இது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை.

4. கவன ஈர்ப்பு

(அ). திருவண்ணாமலை கோட்டம், கலசப்பாக்கம் தொகுதியில் பருவமழை இல்லாத காரணத்தினால் குடிதண்ணீர் பஞ்சம் கடுமையாக உள்ளது குறித்து.

* திரு. பி. எஸ். திருவேங்கடம்: தலைவர் அவர்களே, கீழ்க் கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

> "திருவண்ணாமலை கோட்டம், கலசப்பாக்கம் தொகுதியில் தொடர்ந்து நான்கு ஆண்டுக் காலமாக பருவமழை சரிவர இல்லாத காரணத்தால் தற்சமயம் குடிதண்ணீர் பஞ்சம் கடுமையாக உள்ளது. மக்கள் கவலையாக இருக்கிறார்கள். அதற்கான உரிய நடவடிக்கையினை அரசு எடுக்க வேண்டும்."

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: கலசபாக்கம் சட்டமன்ற தொகுதியானது கலசபாக்கம் துரிஞ்சபுரம் ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள எல்லா கிராமங்களும் சேத்துப்பட்டு ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள 11 கிராமங்களும் சேர்ந்தது ஆகும்.

[திரு. எஸ். இராகவானந்தம்] [1977 ஆகஸ்ட் 8

மேற்கூறிய தொகுதியில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் முடிக்கப்பட்ட ஊரக குடி-நீர் பணிகள வருடாந்தர வாரியாக கீழே தரப்பட்டு உள்ளன.

1974—75	பவர் பம்பு	—	1	திட்டம்.
	கை பம்பு	—	35	திட்டங்கள்.
1975—76	பவர் பம்பு	—	3	திட்டங்கள்.
	கை பம்பு	—	18	திட்டங்கள்.
1976—77	பவர் பம்பு	—	இல்லை.	
	கை பம்பு	—	31	திட்டங்கள்.
1977—78	பவர் பம்பு	—	இல்லை.	
	கை பம்பு	—	1	திட்டம்.

நடப்பு ஆண்டில் கூடுதலாக 8 ஆழ்குழாய் கிணறுகள் அமைக்கக் கருதி, அதற்கான பணியும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

2. மாவட்டங்களில் நிலவும் வறட்சி நிலைமைகளை கருத்திற் கொண்டு, மாவட்ட ஆட்சியரால் தயாரிக்கப்பட்ட பட்டியலுக்கு இணங்க மேற்கூறிய பணிகள் குடி-நீர் வாரியத்தால் மேற்கொள்ளப பட்டன.

3. குடி-நீர் தேவைப்படும் எல்லா ஊர்களுக்கும், குடிநீர் வழங்கும் நோக்கத்துடன் மேறகொள்ளப்பட்ட ஆய்வின் அடிப்படையில் அனைத்துக் குடியிருப்புகளுக்கும் குடி-நீர் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. குடி-நீர் தேவைப்படும் குடியிருப்புகள் அனைத்தும், ஆறு வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டில், முதல் இரண்டு வகையான குடியிருப்புகளுக்கு மட்டும், அதாவது ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்கு குடி-நீரே இல்லாத குடியிருப்புகளுக்கும் கிடைக்கின்ற நீர் உவராக உள்ள குடியிருப்பு களுக்கு மட்டுமே குடி-நீர் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

திரு. பி. எஸ். திருவேங்கடம்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் ஏற்கனவே என்னுடைய தொகுதியில் குடி-நீர்ப் பிரச்னையைத் தீர்ப்பதற்காக போடப்பட்ட திட்டங்களை பற்றிச் சொன்னார்கள். நான நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். தற்சமயம் ஏற்கனவே போடப்பட்ட குழாய்கள் பெரும்பாலானவை ரிப்பேராக உள்ளன. குடி-நீர் வாரிய அதிகாரிகளால் கவனிக்கப்படாமல் இருக்கிறது. நான்

திருவண்ணாமலை கோட்டம், கலசப்பாக்கம் தொகுதியில் பருவமழை இல்லாத காரணத்தினால் குடிதண்ணீர் பஞ்சம் உள்ளது குறித்து

நேற்றைய தினம்கூட சென்று பார்த்தேன். அந்த ரிப்பேராக உள்ள குழாய்கள் கவனிக்கப்படாமல் இருக்கின்றன. மக்கள் குடிநீருக்காக மிகவும் கஷ்டப்படுகிறார்கள். திருவண்ணாமலையில் இருக்கிற ஏ. இ. சொல்கிறார்கள். வேலூரில் இருக்கிற ஈ. இ. ஆகியோர் சாமான்களை—ஸ்பேர் பார்ட்ஸ்களை—வாங்கித் தரவில்லை என்று அவைகளை எல்லாம் உடனடியாக ரிப்பேர் செய்து பொதுமக்கள் பயன்படுத்தும் வகையில் இந்த அரசு செய்துதர வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: அதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் இன்றே எழுதிக் கொடுத்தால் இன்றே உத்தரவு தரப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) தஞ்சை மாவட்டத்தில் விவசாயக் கிடங்குகளில், நீண்ட நாட்களுக்கு முன் வாங்கப்பெற்று, வீரியமிழந்த நிலையில் உள்ள பூச்சி மருந்துகளை விநியோகிக்காது தடுப்பது குறித்து.

* **திரு. மு. அம்பிகாபதி:** தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

“தஞ்சாவூர் மாவட்டத்தில் விவசாயக் கிடங்குகளில் நீண்ட நாளைக்கு முன்னர் தி. மு. க. அரசு காலத்தில் டெண்டர் கொடுத்து வாங்கப்பட்ட பூச்சி மருந்துகள் இருப்பு உள்ளதாகத் தெரிகிறது. அவை, வீரியமிழந்துள்ள நிலையை அரசு உணர்ந்து அவற்றை விநியோகிப்பதைத் தடுக்க முன்வந்து விவசாயிகள் காக்கப்படவும் உற்பத்தி பெருகவும் நடவடிக்கை எடுப்பது குறித்து”.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, தஞ்சாவூரில் சேமித்து வைக்கப்பட்ட 29 இரசாயனப் பூச்சி மருந்துகளில் 9 பூச்சி மருந்துகள் உரிய காலத்திற்கு அதிகமாகவே இருப்பில் இருந்து வந்துள்ளன. தஞ்சாவூர், விவசாயத்துறை

---

* ம் பக்கத்தில் இணைப்பு ஆக அச்சிடப்பெற்றுள்ளது.